திரு. சி. பொன்னுசாமி : கனம் சபாநாயகர் அவர்களே, அகில இந்தியாவில் மற்ற எந்த மாகாணத்திலாவது இதுபோன்று இசை மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்குவதுபற்றி ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : புதுச்சேரியில் மட்டும் அதுபற்றிப் பரிசீலனை செய்திருக்கிறார்கள்.

திரு. மு. கருணாநிதி : இந்த ஆராய்ச்சி சம்பந்தமாக அண்ணா மலைப் பல்கலைக்கழகத்திலிருக்கும் தாவர ஆராய்ச்சி நிபுணர் திரு. சிங் அவர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : அண்ணாமலைப் பல்கலைக்கழகத் திலிருந்து ஒரு ரிபோர்ட் அனுப்பப்பட்டிருக்கிறது. அதுவும் பரிசீலனையில் இருக்கிறது.

Assembly seats

* 3 *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether any representation was made on behalf of the Government to the Delimitation Commission regarding the strength of the Assembly seats; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The State Government have suggested to the Delimitation Commission that the number of seats to be assigned to the Legislative Assembly of this State might be 234, adopting the integral multiple 6.

(அ) & (இ) இம்மாநிலச் சட்ட சபைக்காக ஒதுக்க வேண்டிய ஸ்தானங்கள், லோக் சபையில் இம்மாநிலத்திற்கென ஒதுக்கப்பட் டுள்ள ஸ்தானங்களின் எண்ணிக்கையைப்போல் ஆறு மடங்கு இருக்க வேண்டுமென இம்மாநில அரசினர் தேர்தல் தொகுதி நிர்ணயக் கமிஷனிடம் கருத்து தெரிவித்துள்ளனர்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இன்னும் பெரிய ராஜ்யங்களில் ஒரு பார்லிமெண்ட் தொகுதிக்கு ஏழு சட்டசபைத் தொகுதி என்று இருக்கிறபோது நம் ராஜ்யத்தில் மட்டும் ஆறு என்று நிர்ணயிக்கக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதுபற்றி வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போதே கருத்துத் தெரிவிக்கப்பட்டது. அப்போதும் அதுபற்றிக் குறிப்பிட்டேன். எல்லாவற்றையும் நன்றாக ஆராய்ந்த பிறகுதான் ஆறு தொகுதி என்று முடிவு செய்யப்பட்டது. டீ லிமிடேஷன் குழுவினரும் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

6th August 1963]

திரு. கே. ஏ. மதியழகன் : நமது அண்டை மாநிலமான ஆந்திர மாநிலத்தில் இதே ஜனத்தொகை இருந்தாலுங்கூட இங்கே அதிகமாக இடம் கொடுக்காது ஆறு போதும் என்று வற்புறுத்த ஏதேனும் பிரத்யேகக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பிரத்யேகமான காரணம் எதுவும் இல்லை. எல்லாவற்றையும் ஆராய்ந்த பிறகுதான் ஆறு என்ற முடிவு செய்யப்பட்டது.

திரு. ஜே. மாதா கௌடர் : சட்டசபை ஸ்தாபனத்தைப் பிரிக்கும்போது எந்த வருஷத்திய ஜன கணிதையை வைத்துப் பிரிக்கப்படுகிறது ? புதிய கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : புதிய சென்ஸஸ் கணக்கை வைத்துத்தான் இது எல்லாம் பிரிக்கப்படுகிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அங்கத்தினர் எண்ணிக்கையை 234 ஆக அதிகரித்துவிட்டால் இந்த இடம் போதாது என்று எண்ணுகிறேன். புதியதாக சட்டசபை கட்டிடம் கட்ட உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கொஞ்சம் நெருங்கி உட்கார்ந்தால் இந்த இடமே போதும் என்று நினைக்கிறேன். இருந்தாலும் வேறு ஒரு மண்டபம் கட்டும் யோசனை அரசாங்கத்திற்கு இருக்கிறது.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்போது அதிகமாக இடம் ஒதுக்குகிற காரணத்தினால் ஹரிஜனங்களுக்கு அதிகமாக இடம் ஒதுக்கும் எண்ணம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஜன விகிதாசார அடிப்படையில்தான் இடம் ஒதுக்கப்படும்.

திரு. மு. கருணாநிதி : இப்போது தனித் தொகுதிகளாக இருப்பதைப் பொதுத் தொகுதிகள் என்றும், பொதுத் தொகுதிகளாக இருப்பதைத் தனித் தொகுதிகள் என்றும் மாற்றப்படும் என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனித் தொகுதி என்று ஒன்றும் கிடையாது. ஆனால் இப்போதுள்ள அமைப்பை மாற்ற வேண்டுமானால் டீ லிமிடேஷன் குழு அதைக் கவனிக்க வேண்டும். அப்புறம் பார்லிமெண்டு அதை முடிவு செய்ய வேண்டும்.

Farm-Forestry Scheme

* 4 *Q.*—Sri S. MADHAVAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal to implement the Farm-Forestry Scheme in this State; and